# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரி (திருத்தச்) சட்டம்

---

(1998, மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1998, ஏப்பிறல் மாதம் 03 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 20.25 தபாற் செலவு: ரூபா 4.00

# 1998 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரி (திருத்தச்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.- ஒ. 43/ 97

## 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

1. இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப்பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :- 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(3) பண்டங்களின் இறக்குமதி மீதான வரி, அது சுங்கத்தீர்வையொன்று என்றாற்போன்றும் அத்துடன் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட எல்லாப் பண்டங்களும், தீர்வை விதிக்கப்படற்பாலவையும் சுங்கத் தீர்வைக்கு உட்பட்டவையும் என்றாற்போன்று இறுக்கப்படுதலும் அறவிடப்படுதலும் சேகரிக்கப்படுதலும் வேண்டும். இவ்வேற்பாடுகள் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி சுங்கப் பிணையத்திலுள்ள இடப்பரப்பிற்குள் உட்புகுந்துள்ள எவையேனும் பொருட்களுக்கு ஏற்புடையனவாகமாட்டா :

ஆயினும், எவ்வாறாயினும், உற்பத்தியின் நோக்கங்களுக்கென பயன்படுத்தப்படுவதற்கான பொருட்களை இறக்குமதி செய்பவரும் அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்பவருமான பதிவு செய்யப்பட்ட ஆளொருவரால் அல்லது 22 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு எவரேனும் ஆளினால் இறக்குமதி செய்யப்படும் எவையேனும் பொருட்கள் மீது வருமதியான வரிக் கொடுப்பனவை, அத்தகைய பொருட்களின் இறக்குமதித் தேதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அல்லது அமைச்சரால் தீர்மானிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்படக்கூடியவாறான அறிவித்தலில் குறிப்பிடப்படும் தொண்ணூறு நாட்களை விஞ்சாத அத்தகைய வேறு காலப்பகுதிக்கு, அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மீது வருமதியான வரித்தொகையை மேவுகின்ற வங்கி உத்தரவாதமொன்றை அல்லது கூட்டிணைப்பு உத்தரவாதமொன்றை கொடுத்துதவுவதற்கமைய பிற்போடலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(1அ) ஒராம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், வழங்கப்பட்ட பண்டங்கள் தொடர்பில் அப்பண்டங்கள் ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் பணப்பட்டியலொன்று வழங்கப்படும்போது அத்தகைய பண்டங்கள் வழங்கப்பட்ட நேரமானது, பணப்பட்டியல் வழங்கப்பட்ட நேரமாகக் கருதப்படுதல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(2அ) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பில், அத்தகைய சேவை புரியப்பட்ட தேதியிலிருந்து பத்து

நாட்களுக்குள் பணப்பட்டியலொன்று வழங்கப் படும்போது, அத்தகைய சேவை வழங்கப்பட்ட நேரமானது பணப்பட்டியல் வழங்கப்பட்ட நேரமாகக் கருதப்படுதல் வேண்டும்.".

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "ஓர் உடன்படிக்கையின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன்பின்னர் செய்துகொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கையின் கீழ்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(4) அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(4) ஆணையாளர் – தலைமையதிபதி, 23 ஆம் பிரிவின் கீழ் கொடுப்பனவு அடிப்படையொன்றில் வரிக்கு கணக்குக் காட்டுமாறு பதிவு செய்யப்பட்ட ஆளெவரையும் பணித்துள்ளவிடத்து, அத்தகைய ஆளினால் வழங்கப்பட்ட பண்டங்களினதும் சேவை களினதும் வழங்கல் நேரமானது, அத்தகைய வழங்கல் தொடர்பிலான கொடுப்பனவு பெறப்பட்ட நேரமாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "இச்சட்டத்தின்கீழ் இறுக்கப்படற்பாலதான ஏதேனும் வரியையும் அத்துடன் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் செலுத்தப் படற்பாலதான உற்பத்தித் தீர்வையையும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "இச் சட்டத்தின்கீழ் இறுக்கப்படற்பாலதான ஏதேனும் வரியையும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (i) என்னும் பந்தியில், "இல்லாதொழிந்த நேரத்தின் பின்னர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இல்லாதொழிந்த நேரத்தில்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) அப்பிரிவின் (10) ஆம் உட்பிரிவில், "செலுத்தப்பட்ட தொகையாக அல்லது மீளளிக்கப்படற்பாலதான ஏதேனும் தொகையாக அல்லாத வைப்பிலிடப்பட்ட தொகையாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வரியைக் கழித்துச் செலுத்தப்பட்ட தொகையாக அல்லது மீளளிக்கப்படற்பாலதான ஏதேனும் தொகையாக அல்லாத, இச்சட்டத்தின்கீழ் செலுத்தப் படற்பாலதான வரியைக் கழித்து வைப்பிலிடப்பட்ட தொகையாக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(4) அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :–

"(11) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை யொன்றாக அல்லாததும் மீளாய்வு செய்யப் படற்பாலதல்லாததுமானதும், 1996 திசெம்பர் 23ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் செய்து கொள்ளப்பட்டதுமான உடன்படிக்கையொன்றின் கீழ் பண்டங்கள் அல்லது சேவைகள் வழங்கப் படுமிடத்து, அத்தகைய வழங்கலின் பெறுமதி யானது, அத்தகைய வழங்கலுக்கான பிரதிபயனுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதாக, ஆணையாளர்–தலைமை யதிபதியால் தீர்மானிக்கப்பட்ட வரியைக் கழித்து, அத்தகைய உடன்படிக்கையில் விதித்துரைக்கப்பட்ட வாறான அத்தகைய பிரதிபயனாதல் வேண்டும்.

(12) குத்தகை உடன்படிக்கையொன்றின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் பண்டங்கள், அதனை யடுத்து குத்தகைக் காலப்பகுதியின் முடிவில் குத்தகை உடன்படிக்கையின் மொத்தப் பிரதிபயனின் பத்து சதவீதத்தை விஞ்சாத பிரதிபயனொன்றுக்குக் குத்தகைப் பெறுநர் ஒருவருக்குக் கைமாற்றப் படுமிடத்து, அத்தகைய பிரதிபயன் குத்தகை உடன்படிக்கையின் பிரதிபயனின் ஒரு பகுதியாகக் கருதப்படுதல் வேண்டும் .".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "ஏதேனும் தீர்வையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் தீர்வையும் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின்கீழ் செலுத்தப் படற்பாலதான ஏதேனும் உற்பத்தித் தீர்வையும்"; என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் பிரிவை நீக்கஞ்செய்வதன் மூலமும்.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில், "இதனை யொத்த புலமைச் சொத்து உரிமை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இதனையொத்த புலமைச் சொத்து உரிமை ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(iv) (ஒரு கப்பலிலிருந்து இன்னொன்றுக்கு ஏற்றியனுப்பப்படுதல் உட்பட) பண்டங்களை அல்லது பயணிகளை சர்வதேச ரீதியில் ஏற்றிச் செல்லுதல் .".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (அ), (ஆ), (இ) என்னும் பந்திகளை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(அ) விடயத்திற்கேற்ப ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவில் விடயத்திற்கேற்ப ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சியுள்ளவிடத்து ; அல்லது

(1) அப்போது முடிவடையும் பன்னிரண்டு மாத காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான அவரது பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் மொத்தப் பெறுமதி, ஒரு மில்லியன் எட்டு இலட்சம் ரூபாவை விஞ்சியிருப்பின் ;

(2) ஏதேனும் நேரத்தில் விடயத்திற்கேற்ப அடுத்துறும் வரிவிதிக்கப்படற்பாலதான ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட காலப்பகுதியில் இலங்கையில் அவரது வரிவிதிக்கப்படற்பாலதான பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வழங்கல்களின் மொத்தப் பெறுமதி, ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சக்கூடிய சாத்தியமுண்டு என அல்லது அடுத்துறும் பன்னிரெண்டு மாத காலப் பகுதியில் ஒரு மில்லியன் எட்டு இலட்சம் ரூபாவை விஞ்சக்கூடிய சாத்தியமுண்டு என நம்புவதற்கு நியாயமான ஏதுக்களிருப்பின் :

ஆயினும், எவ்வாறாயினும் பண்டங்களின் வழங்கல், தனிமையாக்கப்பட்ட கொடுக்கல், வாங்கலொன்றைத் தொடர்புறுத்துகின்றது என ஆணையாளர் – தலைமை அதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, இப்பிரிவின் நோக்கங்களுக்காக வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதியைக் கணிப்பிடுகையில் அத்தகைய வழங்கலின் பெறுமதி புறநீக்கம் செய்யப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தில், "10 ஆம் பிரிவின் கீழ் அல்லது 12 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "10 ஆம் பிரிவின்கீழ் அல்லது 12 ஆம் பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது 75 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்டவராகக் கருதப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "10 ஆம் அல்லது 12ஆம் பிரிவின்கீழ் பதிவுக்கான விண்ணப்பமொன்றைச் செய்யுமிடத்து" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "10ஆம் அல்லது 12ஆம் பிரிவின்கீழ் பதிவுக்கான விண்ணப்பமொன்றைச் செய்யுமிடத்து அல்லது 75 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஆளொருவராகக் கருதப்படுமிடத்து" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம், இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "சான்றிதழைத் துலாம்பரமாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சான்றிதழைத் துலாம்பரமாக" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "பதிவுத் திகதியைப் பின்தொடர்ந்துவரும் அடுத்தடுத்த எட்டு வரிவிதிக்கப்படற்பாலனவான காலப்பகுதிகளுக்கும்" என்னும் சொற்களிலிலிருந்து, "அத்தகைய வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிகள் கழிந்த பின்னர்" என்பது வரையிலான எல்லாச் சொற்களையும் இலக்கங்களையும் நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"பதிவுத் திகதியைப் பின் தொடர்ந்துவரும் இருபத்துநான்கு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு, பதிவு செய்யப்பட்ட அத்தகைய ஆள், வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டுநடாத்தாது அல்லது நிறைவேற்றா தொழிந்துள்ளவிடத்து அல்லது அத்தகைய காலப் பகுதிக்குள் வரிவிதிக்கப்படற்பாலதான ஏதேனும் காலப்பகுதியின்போது 10 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள பெறுமதியை விஞ்சாதவிடத்து, அத்தகைய வரிவிதிக் கப்படற்பாலதான காலப்பகுதிகள் கழிந்த பின்னர்" ;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "பத்தாம் பிரிவின்கீழ் அல்லது 12 ஆம் பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட எவரேனும் ஆள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவரேனும் ஆள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அத்தகைய வழங்கலைப் பெறும் பதிவுசெய்யப்பட்ட இன்னொருவருக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய வழங்கலைப் பெறும் இன்னொருவருக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஆ) வழங்கல் எந்த ஆளுக்குச் செய்யப் படுகிறதோ அந்த ஆளின் பெயரும் முகவரியும் " ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், "வழங்கலின் பெறுமதியும் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் செலுத் தப்படற்பாலதான உற்பத்தித் தீர்வையும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "வழங்கலின் பெறுமதியும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக, பின்வருவதனை இடுவதன் மூலமும் :

"(6) இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத பெறுமதியுடைய வரி விதிக்கப்படற்பாலதான வழங்கலொன்றைச் செய்யுமிடத்து அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆள் பின்வருவனவற்றை எடுத்துக்காட்டும் வரிப்பணப் பட்டியலொன்றை வழங்கலாம் —

(அ) வழங்குநரின் பெயர், முகவரி, பதிவிலக்கம் ;

(ஆ) வரிப்பணப்பட்டியல் வழங்கப்பட்ட தேதியும் அதன் தொடரிலக்கமும் ;

(இ) வழங்கலின் தேதியும் வழங்கப்பட்ட பண்டங்களின் அல்லது சேவைகளின் விவரணமும் ;

(ஈ) வழங்கலின் தொகை அல்லது அளவு ;

(உ) வழங்கலுக்கான வரி உட்பட்ட பிரதிபயனும் இயைபான வரி வீதமும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மாதத்தின் கடைசித் தினத்திற்குப் பிந்தாமல்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்வதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (12) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக, பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(12) ஆணையாளர் – தலைமையதிபதி (10) ஆம் உட்பிரிவின்கீழ் தண்டமொன்றை விதிக்கின்றவிடத்துத் தவிர, (1) ஆம் உட்பிரிவின் அல்லது (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஒவ்வோராளும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கான குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்க முறையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "வரியிலிருந்து கழிப்பதற்கு உரித்துடையவராவர்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வரியிலிருந்து கழிப்பதற்கு உரித்துடையவராவார் ;

ஆயினும், எவ்வாறாயினும், கொடுப்பனவு அடிப் படையிலான கணக்கீட்டு முறையைக் கையாளும் ஆளெவரும், எந்த வழங்கலுக்கு அத்தகைய ஆளி னால் கொடுப்பனவொன்று செய்யப்பட்டுள்ளதோ அந்த வழங்கலொன்று தொடர்பில் மாத்திரம் இச்சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படற்பாலதான அவ ரது உள்ளீட்டு வரியின் அந்த அளவின்மீது வரவை உரிமைகோருவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்". என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "ஒரு மாதம் முடிவடைவதன்மீது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டு மாதங்கள் முடிவுறுவதன்மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தை நீக்கஞ்செய்து அதற்குப்பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன் மூலமும் :-

"ஆயினும், எவ்வாறாயினும் வரிவிதிக்கப்படற் பாலதான காலப்பகுதியொன்றில் —

(அ) சைவர் வீதமிடப்பட்ட வழங்கல்களின் பெறுமதி, வரிவிதிக்கப்படற்பாலதான அந்தக் காலப்பகுதிக்கு வரிவிதிக்கப்படற்பாலதான மொத்த வழங்கல்களின் ஐம்பது சதவீதத் திற்குக் குறைவாகவிராதவிடத்து, சைவர் வீதமிடப்பட்ட வழங்கல்கள், வரிவிதிக்கப் படற்பாலதான மொத்த வழங்கல்களுக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள் ளனவோ அந்த விகிதாசாரத்துக்குச் சமமான வாறு (வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதியொன்றிலிருந்து முன்கொணரப்பட்ட ஏதேனும் மிகை உட்பட) உள்ளீட்டு வரியின் மிகையின் அத்தகைய பாகம், அல்லது

(ஆ) உள்ளீட்டு வரியின் மிகையொன்றிருக்குமிடத்து, இச்சட்டத்திற்கான அட்டவணையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள இனம் (xxvii) அல்லது (xxviii) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியின்போது இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ள ஆளொருவரின் விடயத்தில் ; அல்லது

(இ) உள்ளீட்டு வரியின் மிகையொன்றிருக்குமிடத்து, (6) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவரின் விடயத்தில், விடயத்திற்கேற்ப மிகையின் அத்தகைய பாகம் அல்லது அத்தகைய மிகை 58 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின்போது மிகை எழுந்ததோ அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவின் பின்னர் அல்லது அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு விவரத்திரட்டு கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து ஒரு மாதத்திற்கும் பிந்தாமல், இதில் எது பிந்தியதோ அப்போது மீளளிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய காலப்பகுதிக்குள் அத்தகைய மீளளிப்பைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் அத்தகைய மீளளிப்பின்மீது, மீளளிப்பு வருமதியாகும் தேதியிலிருந்து அதன் கொடுப்பனவுத் தேதிவரை 59 ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய வீதப்படி வட்டி செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.". ;

(4) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (i) ஆம் பந்தியில் "எவையேனும் பண்டங்களை இடம்பெயர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவையேனும் பண்டங்களை இடம்பெயர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் அல்லது ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டின் ஏதேனும் வியாபாரக் கையிருப்பின் பாகமாக அமையும் மோட்டார் வாகனம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(5) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(6) பதிவு செய்யப்பட்ட எவரேனும் ஆள், தாம் இலங்கையில் ஏதேனும் தொழிலை ஆரம்பித்துள்ளார் என ஆணையாளர் – தலைமையதிபதி திருப்பதியுறும் வகையில் எண்பித்திருக்குமிடத்தும் அத்துடன் அத்தகைய தொழில் தொடர்பில் அத்தகைய ஆரம்பத் தேதியிலிருந்து முப்பது மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களைச் செய்வதற்குப் பொறுப்பேற்குமிடத்தும், ஆணையாளர் – தலைமையதிபதி, அவரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய அத்தகைய தொழில் தொடர்பில் உள்ளீட்டு வரிக்கான வரவினை அனுமதிக்கலாம்.

(7) முப்பத்து மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் வருமதியான தொகையை விஞ்சிய ஏதேனும் மீளளிப்பு அல்லது உரிமை கோரப்பட்ட உள்ளீட்டு வரித்தொகையின் ஏதேனும் மிகை, விடயத்திற்கேற்ப பதிவு செய்யப்பட்ட எந்த ஆளுக்கு மீளளிப்புச் செய்யப்பட்டதோ அந்தப்பதிவு செய்யப்பட்ட ஆளின்மீது அல்லது உரிமைக் கோரிக்கையைச் செய்யும் பதிவு செய்யப்பட்ட ஆளின்மீது மதிப்பீட்டாளர் ஒருவரால் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தொகையானது, விடயத்திற்கேற்ப அத்தகைய மீளளிப்பில் அல்லது மிகையிலுள்ள மிகை உரிமைக்கோரிக்கையில் விளைந்த உள்ளீட்டு வரியின் மிகை முதன்முதலாக எழுந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முதலாம் தினத்தன்று தவணை தவறுகையிலுள்ள வரியாகக் கருதப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆம் பிரிவைத் திருத்துதல்.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "இன்னுமோர் பதிவு செய்யப்பட்ட ஆளுக்குச் செய்யப்பட்ட வழங்கலொன்றின்மீது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இன்னுமோர் ஆளுக்குச் செய்யப்பட்ட வழங்கலொன்றின்மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "எவருக்கு வழங்கல் செய்யப்பட்டதோ அவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவருக்கு வழங்கல் செய்யப்பட்டதோ அவர் பதிவு செய்யப் பட்ட ஆளொருவராக இருப்பின், அவருக்கு" என் னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "பதினைந்தாம் நாளுக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கடைசி நாளுக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவுக்கான இரண்டு காப்புவாசகங்களையும் நீக்கஞ்செய்வதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "பதினைந்தாம் நாளுக்கு" என்னும் சொற்கள் எங்கெங்கு காணப்படு கின்றனவோ அங்கெல்லாம் அவற்றிற்குப் பதிலாக, "கடைசி நாளுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு "வழங்கலொன்றைச் செய்துள்ளார்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வழங்கலொன்றைச் செய்துள்ளார் என அல்லது வழங்கலானது கூட்டுச்சேர்ந்த ஆட்களிடையிலான கொடுக்கல் வாங்கலைத் தொடர்புறுத்துகின்றது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33ஆம் பிரிவு, "காலப் பகுதிக்கு விவரத்திரட்டொன்றைக் கொடுத்துதவியுள்ளவிடத்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "காலப்பகுதிக்கு 21 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு விவரத்திரட் டொன்றைக் கொடுத்துதவியுள்ளவிடத்து" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அத்தகைய தவணை தவறுகைக்கு அத்தகைய அலுவலர் பொறுப்பாளியாக இருப்பினுஞ்சரி, இல்லாவிடினுஞ் சரி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய அலுவலர், ஆணையாளர் – தலைமையதிபதி திருப்தியுறும் வகையில் மாறாக எண்பித்தாலன்றி அத்தகைய அலுவலர் அத்தகைய தவணை தவறுகைக்குப் பொறுப்பாளியாவார் என்றாற் போன்று" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவைப் புகுத்துவதன் மூலம் :-

"(2) கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவொன்று உரிய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ஏதேனும் வரியைச் செலுத்தியிராதவிடத்து அவர் ஆணையாளர் – தலைமையதிபதி திருப்தியுறும் வகையில் மாறாக எண்பித்தாலன்றி, எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், அத்தகைய கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவின் எவரேனும் பங்காளருக்கு அல்லது பதவிதாங்குநருக்கு எதிராக, அத்தகைய தவணை தவறுகைக்குப் பொறுப்பாளியாவார் என்றாற்போன்று இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகள் எல்லாவற்றின்கீழும் அல்லது எவற்றின்கீழும் நடவடிக்கை எடுத்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்.".

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவை (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுதல் மூலமும் ;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(2) கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவொன்று கலைக்கப்படுமிடத்தும் அத்துடன் கூட்டிணைக்கப்படாத அத்தகைய குழு எந்த வரிக்கு ஆளாயிருக்கின்றதோ அத்தகைய வரியை அறவிடமுடியாதிருக்குமிடத்தும் அப்போது எந்தக் காலப்பகுதி தொடர்பில் அத்தகைய வரி செலுத்தப்படற்பாலதாயிருக்கின்றதோ அந்த ஏதேனும் காலப்பகுதியில் பங்காளர் ஒருவராக அல்லது பதவிதாங்குநர் ஒருவராக இருந்த ஒவ்வோராளும், அத்தகைய கூட்டிணைக்கப்படாத குழுவின் அலுவல்கள் தொடர்பில் வரிக் கொடுப்பனவின் தவணை தவறுகையானது அவரைப் பொறுத்தளவில் ஏதேனும் மிக்க கவனமின்மைக்கு, பிழையான செய்கைக்கு அல்லது கடமை மீறுதலுக்கு ஏற்றிக்கூறப்பட முடியாதென அவர் எண்பித்தாலன்றி அத்தகைய வரியின் கொடுப்பனவுக்குக் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஆளாதல் வேண்டும் என்பதுடன் வரி சேகரித்தலும் அறவிடுதலும் பற்றிய இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:–

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தில் அக்காப்புவாசகத்தின் (i) ஆம், (ii) ஆம் பந்திகளை நீக்கஞ்செய்து அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:

"(i) சைவர் வீதமிடப்பட்ட வழங்கல்களைச் செய்யும் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர்; அல்லது

(ii) 22 ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் ஆளெவரும்;

(iii) 22 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் பதிவு செய்யப்பட்ட ஆளெவரும்";

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் —

(அ) அதன் (அ) என்னும் பந்தியில், "வரி விதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதி அல்லது வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதியொன்றில் மாதமொன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வரிவிதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியில் "வரிவிதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதி அல்லது வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதியொன்றில் மாதமொன்று தொடர்பில் வரிவிதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதிக்குரிய ஒரு விவரத்திரட்டைக் கொடுத்துதவத் தவறியுள்ள விடத்து" என்னும் சொற்களுக்குப்பதிலாக, "வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதி தொடர்பில் வரிவிதிக்கற்பாலதான ஏதேனும் காலப் பகுதிக்குரிய ஒரு விவரத்திரட்டைக் கொடுத்துதவத் தவறியுள்ளவிடத்து" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பந்தியில், "செலுத்தப்படல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப்பதிலாக, "செலுத்தப்படல் வேண்டும் : — முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவைத் திருத்துதல்.

ஆயினும் எவ்வாறாயினும், பதிவுசெய்யப்பட்ட ஆளின் எவையேனும் பதிவேடுகள் தொடர்பில் வரிமதிப்பீட்டாளரால் விடுக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகுவதில் பதிவுசெய்யப்பட்ட ஆளினால் தாமதமிருக்குமிடத்து அத்தகைய வட்டி செலுத்தப் படற்பாலதாதல் ஆகாது.".

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் xi இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றது. — முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் xi என்பது நீக்கஞ்செய்யப்படல்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துதல்.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 68ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துதல்.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "பிரதி ஆணையாளர் ஒருவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உண்ணாட்டரசிறை பிரதி ஆணையாளர் அல்லது உண்ணாட்டரசிறை சிரேட்ட வரிமதிப்பீட்டாளர் ஒருவர்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 71அ, 71ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

27. பின்வரும் புதிய பிரிவுகள் 71ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முறையே முதன்மைச் சட்டவாக்கத்தின் 71அ அத்துடன் 71ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்.

"பண்டங்கள் சேவைகள் வரி மீளளிப்பு நிதியம்.

71அ. (1) பண்டங்கள், சேவைகள் வரி மீளளிப்பு நிதியம் என அழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப் படும்).

(2) நிதியத்தில் பின்வருவன வரவுவைக்கப் படுதல் வேண்டும் :

(அ) ஒரு நூறு மில்லியன் ரூபா பணத் தொகையொன்று. இது திரட்டு நிதியத் திலிருந்து நிதியத்திற்குச் செலுத்தப் படுதல் வேண்டும் ;

(ஆ) நியமித்த தேதியிலிருந்து தொடங்கும் ஒவ்வொரு மாதமும் சேகரிக்கப்பட்ட பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரியின் இருபத்தைந்து சதவீதம் அம்மாதத்தை உடனடுத்துவரும் மாதத் தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப் பட்ட எல்லா மீளளிப்புகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.

(4) (i) ஆணையாளர் – தலைமையதிபதி அல்லது அதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் வேறு எவரேனும் அலுவலர் நிதியத்தை நிர்வகித்தல் வேண்டும்.

(ii) மீளளிப்புச் செய்யப்படக்கூடிய முறை மற்றும் விதம் தொடர்பாக ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

தகவல் தருபவர்களுக்குச் சன்மானம்.

71ஆ. ஆளொருவரால் செலுத்தப்படற்பாலதான வரிமதிப்பீட்டிற்கும் அத்துடன் அத்தகைய ஆளிடமிருந்து வரியைச் சேகரிப்பதற்கும் வழிகோலும் தகவலை வழங்குகின்ற வேறு எவரேனும் ஆளுக்கு, ஆணையாளர் – தலைமை அதிபதி, சம்பந்தப்பட்ட விடயத்தின் சூழ்நிலைகளில் நியாயமானதென அவர் கருதுகின்றவாறான அத்தகைய பணத்தொகைகளை அத்தகைய நோக்கத்திற்கெனப் பாராளுமன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தொகைகளிலிருந்து செலுத்தலாம்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சுகின்றதோ" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சுகின்றதோ" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "(1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நியமித்த தேதிக்குப் பின்னர் வரிவிதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதிக்கு" என்னும் சொற்களை இடுவ்தன் மூலமும்;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:—

"(4) பதிவு செய்யப்பட்ட ஆளெவரும் நியமிக்கப் பட்ட தேதிக்கு முன்னர் அத்தகைய ஆளினால் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள் தொடர்பில் 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரிச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின்கீழ் மொத்த விற்பனை வரவு வரியைச் செலுத்தியுள்ளாரெனவும் அத்துடன் 3 ஆம் பிரிவிற் குட்படாத வரிவிதிக்கற்பாலதான வழங்கல்களைச் செய்யும் நெறி முறையின்போது அத்தகைய பண்டங் கள் நியமித்த தேதியன்று அல்லது அதன்பின்னர் அத்தகைய ஆளினால் வழங்கப்பட்டன எனவும் ஆணையாளர் — தலைமையதிபதி திருப்தியுறும் வகையில் எண்பிக்கப்படுமிடத்து செலுத்தப்பட்ட அல்லது அத்தகைய வரிவிதிக்கற்பாலதான வழங்கலுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான அதன் பாகம், 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரிச்சட்டத்தின் பிரிவுகள் 47, 48, 48அ, 48ஆ என்னும் பிரிவுகளின்கீழ் வரவு கணிக்கப்படாவிடில் அல்லது மீளளிக்கப்படாவிடில் அல்லது சொல்லப்பட்ட சட்டத்தின் 49 ஆம் பிரிவின்கீழ் மீளளிக்கப்படாவிடில் 22ஆம் பிரிவின் நோக்கங்களுக்கு உள்ளீட்டு வரிக்கடனாகக் கருதப் படுதல் வேண்டும்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவைத் திருத்துதல்.

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) "வரிமதிப்பீட்டாளர்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட் புகுத்துவதன் மூலமும் :—

"கூட்டுச்சேர்ந்த ஆட்கள்" என்பது—

(அ) ஒரே பங்காளர்களைக் கொண்டுள்ள அல்லது ஒரே பங்காளர்களால் முகாமை செய்யப்படுவதும் கட்டுப்படுத்தப்படுவது மான எவையேனும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கம்பனிகள் என்று ; அல்லது

(ஆ) ஏதேனும் கம்பனியும் அத்துடன் எவரேனும் பங்குதாரர் அல்லது அத்தகைய பங்குதாரரின் வாழ்க்கைத்துணை அல்லது பிள்ளை அல்லது அத்தகைய பங்குதாரரின் வாழ்க்கைத் துணையின் அல்லது பிள்ளையின் எவரேனும் நம்பிக்கைப் பொறுப்பாளர், அக்கம்பனியின் செலுத்தப்பட்ட மூலதனத்தின் இருபத்தைந்து சதவீதத்தை அல்லது அதற்குக்கூடுதலானதை அல்லது பிரித்தெடுக்கப்பட்ட பங்குகளின் இருபத்தைந்து வீதத்தை அல்லது அதற்குக் கூடுதலானதை கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ வைத்திருக்கின்றவிடத்து, எவரேனும் அத்தகைய பங்குதாரரும் என்று; அல்லது

(இ) எந்த இரண்டு தனியாட்களுள் ஒருவர் மற்றவரின் வாழ்க்கைத்துணையாக அல்லது பிள்ளையாக அல்லது அத்தகைய வாழ்க்கைத்துணைக்கான அல்லது பிள்ளைக்கான நம்பிக்கைப் பொறுப்பாளராக இருக்கின்றாரோ அந்த எவரேனும் இரண்டு தனியாட்கள் என்று; அல்லது

(ஈ) பங்காண்மையொன்றும் அத்துடன் தனியாளொருவர் அத்தகைய பங்காண்மையின் எவரேனும் பங்காளரின் உறவினராக இருக்குமிடத்து அத்தகைய தனியாள் ஒருவரும் என்று ; அல்லது

(உ) கூட்டுத்தொழில் முயற்சியொன்றும் அத்துடன் அத்தகைய கூட்டுத்தொழில் முயற்சியின் உறுப்பினர் ஒருவரின் உறவினரான எவரேனும் ஆளும் என்று ; அல்லது

(ஊ) எந்த இரண்டு ஆட்களுள் ஒருவர் மற்றவரின் நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவராக இருக்கின்றாரோ அந்த இரண்டு ஆட்கள் என்று; அல்லது

(ஏ) ஒருவரொருவருக்கு உறவினரான எவரேனும் இரண்டு தனியாட்கள் என்று பொருள் படும்."

(2) முறையே "திறந்த சந்தைப்பெறுமதி" அத்துடன் "வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதி" என்பவற்றிற்கான வரைவிலக்கணங்களை நீக்கஞ் செய்து அவற்றிற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன் மூலமும்:—

"திறந்த சந்தைப் பெறுமதி" என்பது ஏதேனும் தேதியில் பண்டங்களின் அல்லது சேவைகளின் வழங்கலொன்றின் கூட்டுச்சேர்ந்த ஆட்களாகவிராத ஆட்களுக்கிடையே கட்டுப்பாடின்றி முனையப்பட்டுச் செய்யப்பட்ட வழங்கலொன்றாக இருப்பதும், இலங்கையில் அத்தேதியில் அதே சந்தர்ப்ப சூழ்நிலைகளில் வழங்கப்பட்டிருந்தால் அதையொத்த வழங்கல் பொதுவாக பெற்றிருக்கக்கூடிய பெறுமதி தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் அறவிடப்பட்ட ஏதேனும் வரியைக் கழித்து, 1991 ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் கீழ் செலுத்தற்பாலதான தேசிய பாதுகாப்பு அறவீடு புறநீங்கலான, பிரதிபயன் என்று பொருள்படும்;

"வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதி" என்பது—

(அ) (i) எவரேனும் ஆளின் வரிவிதிக்கற்பாலதான வழங்கல்களின் பெறுமதி முந்திய பன்னிரண்டு மாதங்களின்போது முப்பது மில்லியன் ரூபாவை விஞ்சியுள்ளவிடத்து ; அல்லது

(ii) எவரேனும் ஆளின் வரிவிதிக்கற்பாலதான வழங்கல்களின் பெறுமதி அடுத்துறும் பன்னிரெண்டு மாதங்களைக்கொண்ட காலப்பகுதிக்கு முப்பது மில்லியனை விஞ்சுவதாக மதிப்பிடப்பட்டுள்ளவிடத்து; அல்லது

(iii) எவரேனும் ஆளின் கூட்டுமொத்த விற்பனை வரவு 1981ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரிச்சட்டத்தின்கீழ் நியமித்த தேதிக்கு உடன் முன்னரான ஆறுமாதங்களில் முடிவடையும் அடுத்தடுத்துவரும் நான்கு காலாண்டுகளின்போது முப்பது மில்லியன் ரூபாவை விஞ்சியுள்ளவிடத்து;

(iv) ஆளெவரும் சைவர் வீதமிடப்பட்ட வழங்கல்களைச் செய்யுமிடத்து;

(v) ஆளெவரும் அட்டவணையின் இனம் (xxvii) அல்லது (xviii) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளவிடத்து;

(vi) ஆளெவரும் தொழில் ஒன்றைத் தொடங்கியிருப்பதுடன் 22ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதாகப் பொறுப்பேற்குமிடத்து

ஒருமாத காலப்பகுதியொன்று என்று;

(ஆ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்படாத ஆளொருவர் அல்லது சைவர் வீதமிடப்பட்ட வழங்கல்களைச் செய்கின்றவரும் ஆணையாளர் – தலைமையதிபதியின் அங்கீகாரத்தின் மீது காலாண்டு விவரத்திரட்டைச் சமர்ப்பிக்க விருப்பம் கொண்டுள்ளவருமான ஆளொருவர் தொடர்பில் முறையே சனவரி முதலாம் நாளன்றும், ஏப்பிறல் முதலாம் நாளன்றும், யூலை முதலாம் நாளன்றும், ஒற்றோபர் முதலாம் நாளன்றும் தொடங்கும் மூன்று மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதி என்று

பொருள்படும்; ".

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணையைத் திருத்துதல்.

30. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அட்டவணையின் (i) ஆம் இனத்தில் "தேங்காய்கள்" என்னும் சொல்லிலிருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரையிலான எல்லாச் சொற்களையும் நீக்கி விட்டு அவற்றிற்குப் பதிலாக, "தேங்காய்கள், தேங்காய்த் துருவல்கள், தேங்காய்ப்பிண்ணாக்கு, பதப்படுத்தப்படாத வன உற்பத்திப் பொருட்கள், தேயிலை, தேயிலைப்பச்சிலை, நெல், ஏலக்காய், கறுவா, கராம்பு, சாதிக்காய், மிளகு அல்லது ஏதேனும் கமத்தொழில் தோட்டப்பயிர்ச்செய்கை, விலங்கு வேளாண்மை, பறவை அல்லது மீன்பிடிப் பொறுப்புமுயற்சி என்பவற்றின் வேறு ஏதேனும் பதப்படுத்தப்படாத விளைபொருளின் வழங்கல் அல்லது இறக்குமதி;" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது;

(2) அவ்வட்டவணையின் (ii) ஆம் இனத்தில் "என்பவற்றின் இறக்குமதியும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "என்பவற்றின் வழங்கல் அல்லது இறக்குமதி" என்னும் சொற்களை இடுவதன் மூலம்;

(3) அவ்வட்டவணையின் (iv) ஆம் இனத்தை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாக பின்வரும் இனத்தை இடுவதன் மூலம் :—

"(iv) ஏதேனும் விவரணத்திலான பாண் வழங்கல் அல்லது இறக்குமதி " ;

(4) அவ்வட்டவணையின் (vi) ஆம் இனத்தில் "வழங்கல்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "வழங்கல் அல்லது இறக்குமதி செய்தல்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் ;

(5) அவ்வட்டவணையின் (xii) ஆம் இனத்தில், "திரவப் பெற்றோலிய வாயு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "திரவப் பெற்றோலிய வாயு அத்துடன் பெற்றோல் ;" என்னும் சொற்களை இடுவதன் மூலம் ;

(6) அவ்வட்டவணையின் (XV) ஆம் இனத்தில் "இறக்குமதி ;" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "வழங்கல் அல்லது இறக்குமதி;" என்னும் சொற்களை இடுவதன் மூலம் ;

(7) அவ்வட்டவணையின் (xix) ஆம் இனத்தில் "இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் அல்லது மாகாண சபையொன்றின்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் ;

(8) அவ்வட்டவணையின் (xxii) ஆம் இனத்தில் "இறக்குமதி செய்தல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வழங்கல் அல்லது இறக்குமதி செய்தல்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் ;

(9) அவ்வட்டவணையின் (XXV) ஆம் இனத்தை நீக்கஞ் செய்வதன்மூலம் ;

(10) அவ்வட்டவணையின் (XXVi) ஆம் இனத்தில் "75 கிலோ வரை" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "90 கிலோ ஹேர்ட்ஸ் வரை" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் ;

(11) அவ்வட்டவணையின் (XXiX) ஆம் இனத்தை நீக்கஞ் செய்வதன்மூலம் ;

(12) அவ்வட்டவணையின் (XXX) ஆம் இனத்தை நீக்கஞ் செய்து அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் இனத்தை இடுவதன்மூலம் :–

(XXX) இலங்கையிலுள்ள எந்தக் கம்பனியுடனும் 1978 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் நியமித்த தேதியன்று அல்லது அதற்கு முன்னர் உடன்படிக்கையொன்று செய்து கொள்ளப்பட்டதோ அந்தக் கம்பனியொன்றுக்கு அத்தகைய உடன்படிக்கை தொடர்புறுத்தும் கருத்

திட்டத்தின் மொத்தச் செலவு 50 அமெரிக்க டொலருக்கு அல்லது அதற்குச் சமமான தொகைக் குக் குறைவாயில்லாமல் இருப்பின் 1979 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க உணாட்டரசிறைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் வதிவற்ற ஆளொருவரால் கட்டிடக்கலை, பொறியியல் தொகை அளவீட்டு அல்லது நிர்மாண முகாமைத்துவ சேவைகளை இலங்கையில் வழங்குதல் ;

(13) அவ்வட்டவணையின் முடிவில் பின்வரும் இனங்களைச் சேர்ப்பதன்மூலம் :–

(xxxii) வதிவிட இடவசதியின் வழங்கல், குத்தகை அல்லது வாடகை ;

(xxxiii) மரக்கட்டை வழங்கல் அல்லது இறக்குமதி ;

(xxxiv) மருத்துவ நிறுவனங்களால் வழங்கப் படும் எல்லா சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளினதும் அல்லது அத்தகைய பராமரிப்பை வழங்கும் தொழிலியல் ரீதியில் தகைமைபெற்ற ஆட்களினால் வழங்கப்படும் அத்தகைய சேவைகளின் வழங்கல் ;

(XXXV) நியமித்த தேதியிலிருந்து தொடங்கும் இரண்டாண்டுக் காலப்பகுதியின்போது உல்லாசப்பயணிகளுக்கு ஓட்டல் தங்கும் இடவசதி வழங்கல் ;

(xxxvi) நியமிக்கப்பட்ட திகதியிற் தொடங்கி இரண்டு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதியின்போது 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உல்லாசப் பயணச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட உல்லாசப் பயணச் சபையுடன் பதிவு செய்யப்பட்டவர்களான பிரயாண முகவர்களால் உல்லாசப் பயணிகளுக்கு உள்வருகைச் சேவைகளின் வழங்கல்.

(xxxvii) பவளங்கள், மாணிக்கக்கற்கள், இயற்கை அல்லது செயற்கை மணிக்கற்கள் அல்லது பகுதி மணிக்கற்கள் மாணிக்கத் தூள், வேறு தூள், விலைமதிப்புள்ள உலோகங்கள் அல்லது விலைமதிப் புள்ள உலோகங்கள் பதித்த உலோகங் கள் அத்துடன் தங்க நாணயங்கள் என்ப வற்றின் வழங்கலும் இறக்குமதியும்;

(xxxviii) சுகாதார சேவைகளை வழங்குவதற் கான அம்பியுலன்ஸ் வண்டிகள், மருத்துவ, பல்மருத்துவ உபகரணம் என்பன உட்பட பொறி, மருத்துவ, சத்திரசிகிச்சைச் சாதனங்கள், கருவிகள், துணையுறுப்புகள் வழங்கலும் இறக்கு மதி செய்தலும்.

31. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.